ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2293/13 - 2022 අගෝස්තු මස 15 වැනි සඳුදා - 2022.08.15

2293/13 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KDS/PAN/04/04/02/25.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2014/PC/323.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பன்வில பிரதேச செயலாளர் பிரிவில், இல. 729 - பன்வில கிராம அலுவலர் பிரிவில், உடகும்புற கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் இல. ஆ.வ.மஹ 7118 கொண்ட 2021.11.27 ஆந் திகதிய அடிப்படை வரை படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தமாக 0.4346 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க் குறிப் பிடப்படும் காணித்துண்டு இலக்கங்கள், பெயர்கள் மற்றும் எல்லைகளைக் கொண்ட காணியின் விபரங்கள் :

01. **துண்டு இல. 01 - காணியின் பெயர் : கல்பிஹில்ல வத்த; உரிமை கோருபவரின் பெயர் மற்றும் முகவரி : அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 21, மீரானியா வீதி, கொழும்பு 12; விஸ்தீரணம்: 0.4346 ஹெக்டயார்**

வடக்கு: அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் உரிமை கோரும் கல்பிஹில்லவத்த மற்றும் வீதி (பிரதேச சபை); கிழக்கு: வீதி (பிரதேச சபை); தெற்கு: வீதி (பிரதேச சபை) படிவரிசை மற்றும் R.Y. அபேசின்ஹ மற்றும் மேலும் நபர்கள் உரிமை கோரும் தெனியே கும்புர; மேற்கு: R.Y. அபேசின்ஹ மற்றும் மேலும் நபர்கள் உரிமை கோரும் தெனியே கும்புர.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022.10.17 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு பன்வில பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022.10.05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிரஞ்சன் ஶ்ரீமந்த சேனாதீர,
பிரதேச செயலாளர்,
பன்வில.

பிரதேச செயலகம்,
பன்வில,
2022, ஓகத்து 10.

EOG 08 - 0134